செ.வெ.எண்.160 நாள்.11.03.2018.

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு மருத்துவமனை வளாகத்தில், ரூ.4 கோடி மதிப்பில் புதிய கூடுதல் கட்டடத்திற்கான பணிகளுக்கான பூமி பூஜையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு, பணிகளை தொடங்கி வைத்தார். மேலும், அரசு மருத்துவமனையில் ரூ.1.5 கோடி மதிப்பில் சிடி ஸ்கேன் மற்றும் ரூ.9 இலட்சம் மதிப்பில் மேமோ கிராம் கருவியினை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் பொது மக்களின் பயன்பாட்டிற்கான திறந்து வைத்தார்.

------

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு மருத்துவமனை வளாகத்தில், ரூ.4 கோடி மதிப்பிலான புதிய கூடுதல் கட்டடப் பணிகளுக்கான பூமி பூஜை மற்றும் ரூ.1.5 கோடி மதிப்பில் சிடி ஸ்கேன் மற்றும் ரூ.9 இலட்சம் மதிப்பில் மேமோ கிராம் கருவிகள் திறப்பு விழா நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (11.03.2018) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு, ரூ.4 கோடி மதிப்பிலான புதிய கூடுதல் கட்டடப் பணிகளுக்கான பூமி பூஜை தொடங்கி வைத்து, ரூ.1.5 கோடி மதிப்பில் சிடி ஸ்கேன் மற்றும் ரூ.9 இலட்சம் மதிப்பில் மேமோ கிராம் கருவிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

தென்காசிஅரசு மருத்துவ மனையில் புற நோயாளிகள் பிரிவு, ஸ்கேன் அறை, எக்ஸ்ரே அறை, ஆய்வக கூடம், இசிஜி அறை, நோயாளி பதிவு அறை ஆகிய வசதிகளுடன் 11 ஆயிரம் சதுர அடி பரப்பில் தரை தளமும், மருத்துவப் பொருட்கள் சேமிப்பு அறை, பதிவறை, இரத்த சேமிப்பு அறை, வெளி நோயாளிகள் பல் மருத்துவப் பிரிவு மற்றும் கண் பரிசோதனை பிரிவு உள்ளிட்ட வசதிகளுடன் 9845 சதுர அடி பரப்பில் முதல் தளமும், ஆக மொத்தம் 20,845 சதுர அடி பரப்பில் ரூ.4 கோடி மதிப்பில் புதிய கூடுதல் கட்டடம் கட்டுவதற்கான பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். மேலும், இம்மருத்துமனையில் ரூ.1.5 கோடி மதிப்பில் 4/சிடி ஸ்கேன் கருவி, ரூ.9 இலட்சம் மதிப்பில் பெண்களின் மார்பக புற்று நோயை கண்டறிய உதவி மேமோ கிராம் கருவியினையும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களால் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இம்மருத்துவமனைக்கு தேவையான பல்வேறு நவீன கருவிகள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்னும் பல்வேறு வசதிகள் செய்யப்பட்டு, திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இணையாக இம்மருத்துவமனை தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு.செல்வமோகன்தாஸ்பாண்டியன், தென்காசி கோட்டாட்சித் தலைவர் திரு.ராஜேந்திரன், இணை இயக்குநர் (பொது சுகாதாரம்) மரு.இளங்கோ, சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் மரு.சோமசுந்தரம், மருத்துவமனை கண்காணிப்பாளர் திரு.முத்தையா, பொதுப்பணித்துறை (மருத்துவப் பிரிவு) செயற்பொறியாளர் திரு.புவனேஸ்வரன், உதவி செயற்பொறியாளர் திருமதி.தனலெட்சுமி, டான்பெட் துணைத் தலைவர் திரு.கண்ணன் (எ) ராஜு, ஆவின் தலைவர் திரு.ரமேஷ், நெசவாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.ஆறுமுகம், தாய்கோ வங்கி துணைத் தலைவர் திரு.குற்றாலம் சேகர், முக்கிய பிரமுகர்கள் திரு.சண்முகசுந்தரம், திரு.கிருஷ்ண முரளி ராஜா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.